# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


எண்.தே.47/2020 | 567 புதுச்சேரி, - 1 OCT 2020

பெறுநர்

1. அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய/மாநில அரசியல் கட்சிகள்
2. அனைத்து பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மாநில அரசியல் கட்சிகள்

ஐயா,

பொருள்: தேர்தல் துறை - கோவிட்-19-ன்போது பொதுத்தேர்தல்கள் / இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கான இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் – அனுப்பப்படுகிறது.

#####

கோவிட்-19-ன்போது பொதுத்தேர்தல்கள் / இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கான இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் தங்களது தகவலுக்காகவும் மற்றும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

தங்களின் உண்மையுள்ள,

1/10/2020

(பா. தில்லைவேல்)
துணை தலைமைத் தேர்தல் அதிகாரி

இணைப்பு: மேற்சொன்னபடி

<u>நகல் பெறுவோர்</u>:-

மாவட்ட தேர்தல் அதிகாரி, புதுச்சேரி/காரைக்கால்

E:\ASVGENERAL ELECTIONS-2020\LTR TO PPS.DOCX

# கோவிட்–19–இன்போது பொதுத்தேர்தல்களை / இடைத்தேர்தல்களை நடத்துவதற்கான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள்

ஆகஸ்டு 2020

ஆவணஎண்.324.6.EPS.OT.001.2020

இந்தியத் தேர்தல் ஆணையம்

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110001

## கோவிட்–19–இன் போது பொதுத்தேர்தல்களை / இடைத்தேர்தல்களை நடத்துவதற்கான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள்

கோவிட்–19 தொற்றுநோய் பரவுதல் தொடங்கிய பின்னர், உள்துறை அமைச்சகம் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது, அவ்வப்போது வழிகாட்டி நெறிமுறைகளை அளித்து வருகிறது. 29.07.2020ஆம் நாளிட்ட அமைச்சகத்தின்அண்மைக்கால சுற்றறிக்கையில், நாடு முழுவதும் பின்பற்ற வேண்டிய விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் / அறிவுறுத்தல்களை உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது. அதுபோன்று, கோவிட்–19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கைகள், தொற்று நீக்கம், கிருமி நீக்கம் குறித்த நிலையான செயல் நடைமுறைகளை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமும் வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் 17.07.2020 அன்று மத்திய / மாநில அரசியல் கட்சிகள், தங்கள் கருத்துகளை / பரிந்துரைகளை 31.07.2020க்குள் அளிக்குமாறு கோரியது, பின்னர், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அக்காலத்தை 11.08.2020 வரையில் அதனை ஆணையம் நீட்டித்தது. தேர்தல் பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டங்கள் குறித்து, பல்வேறு அரசியல் கட்சிகள், மற்றும் மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் கீழ் வரும் பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை / பரிந்துரைகளை ஆணையம் ஆய்வு செய்தது.

மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு, கோவிட்–19 தொற்றுப் பரவலின் போது, பல்வேறு மாநிலங்களில் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் கீழ் வரும் பகுதிகளில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல்களையும் இடைத்தேர்தல்களையும் கருத்திற் கொண்டு, தேர்தல் நடத்துவதிலுள்ள முக்கிய நடவடிக்கைகள் குறித்த நேர்வில், பின்வரும் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண் | பின்பற்ற வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் |
|---|---|
| 1. | **தேர்தல் நடைமுறைகளின் போது முழுமையாக அனைவரும் பின்பற்ற வேண்டிய பொதுவான வழிகாட்டி நெறிமுறைகள்**<br>1) ஒவ்வொரு தேர்தல் தொடர்பான நடவடிக்கையின்போது ஒவ்வொரு நபரும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.<br>2) தேர்தல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் அரங்கு /அறை / வளாகங்களின் நுழைவாயிலில்<br>a) அனைத்து நபர்களுக்கும் உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளுதல்.<br>b) சுத்திகரிப்பான்(Sanitizer), சோப்பு மற்றும் தண்ணீர் இருக்குமாறு செய்தல்.<br>3) மாநில அரசு மற்றும் உள்துறை அமைச்சகத்தில், நடைமுறையிலுள்ள கோவிட்–19 வழிகாட்டி நெறிமுறைகளின்படி சமூக விலகலைப் பேணுதல்.<br>4) நடைமுறையிலுள்ளவரை, சமூக விலகல் விதிமுறைகளை உறுதி செய்வதற்கு பெரிய அரங்குகள்கண்டறிந்து பயன்படுத்தப்பட வேண்டும்.<br>5) கோவிட்–19 வழிகாட்டி நெறிமுறைகளுக்கு இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்கு வாக்குப்பதிவு பணியாளர்கள் / காவல் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக போதிய எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| 2. | **ஒருங்கிணைப்பு சுகாதார அதிகாரி**<br>ஒட்டு மொத்த வாக்குப்பதிவு நடைமுறைகளின்போது, கோவிட்–19 தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக, மாநிலம், மாவட்டம் மற்றும் சட்டமன்றத் தொகுதி அளவில் ஒருங்கிணைப்பு சுகாதார அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். |
| 3. | **மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனைச் சாதனம் (VVPATs)**<br>1) முதலாவதாக மற்றும் இரண்டாவதாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சீரற்ற முறையில் தெரிவு செய்தல் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனைச் சாதனங்களைத் தயார் செய்தல் போன்றவை பெரிய கூடங்களில் நடத்தப்பட வேண்டும்.<br>2) நடைமுறையின் போது, பயன்பாட்டிற்காக, அதிக அளவிலான துப்புரவாக்கிகள் (Sanitizer)வழங்கப்பட வேண்டும்.<br>3) வாக்குப் பதிவு இயந்திரங்கள் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனைச் சாதனங்களைக் கையாளும் ஒவ்வொரு அலுவலருக்கும் கையுறைகள் கிடைக்கும் வகையில் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| 4. | பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு<br>1) நடைமுறைக்கு ஏற்றவாறு, பெரிய கூடங்களில், பரவலாக்கப்பட்ட முறையில், தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.<br><br>2) இணைய வழி முறை வாயிலாக தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.<br><br>3) அனைத்து பொருள்விளக்கக்காட்சிகள் (Powerpoint), தொடர்புடைய ஆவணங்கள், தலைப்புவாரியாக காணொளி காட்சிகள், சுயமதிப்பீட்டிற்கான கேள்வித் தாள்கள் போன்றவற்றை மென்பொருள் செயலி / இணைய முகப்பில் பதிவேற்றம் செய்யும் நிலையில், எந்தவொரு தேர்தல் அலுவலரும் அவர்களின் தேவைக்கேற்ப உள்நுழைந்து தெரிந்து கொள்ளலாம்.<br><br>4) எந்தவொரு வாக்குப்பதிவு பணியாளருக்காவது, கோவிட்–19 அறிகுறிகள் தென்பட்டால், அவரை மாற்றும் பொருட்டு, மாவட்ட தேர்தல் அலுவலரால் / தேர்தல் அலுவலரால், போதுமான அளவிலான வாக்குப்பதிவு / வாக்கு எண்ணிக்கை / வாக்குப்பதிவு தொடர்புடைய பணியாளர்கள் காத்திருப்பில் வைக்கப்பட வேண்டும். |
| 5. | வேட்பு மனு செய்யும் நடைமுறை<br><br>**I. இணைய வழிமுறையை வழங்குவதற்கு பின்வரும் கூடுதல் தேர்வுரிமைகள் இங்கே அளிக்கப்படுகின்றன:**<br>1) வேட்புமனு தாக்கல் படிவம், தலைமை தேர்தல் அதிகாரி / மாவட்ட தேர்தல் அலுவலரின் வலைதளத்தில், இணைய வழியாக கிடைக்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர் தனது விவரங்களை இணைய வழியில் கிடைக்கப்பெறும் படிவம்–Iஇல் குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்தி செய்து, அதனை அச்சுப்படி எடுத்து குறிப்பிட்ட தேர்தல் அலுவலரின் முன் சமர்ப்பிக்க வேண்டும். (1961ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 3– ஆம் விதி)<br><br>2) மேலும், தலைமை தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அலுவலரின் வலைதளத்திலுள்ள ஆணை உறுதி ஆவணம் (Affidavit) நிரப்பப்பட்டு அதன் அச்சிட்டு, அதனை சான்றுறுதி(notarization) பெற்று, வேட்பு மனு படிவத்துடன் தேர்தல் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>3) குறிப்பிடப்பட்ட இணைய தளத்தில், வேட்பாளர், தனக்குரிய பிணையத் தொகையை இணைய வழியில் வைப்பு வைக்க வேண்டும். இருப்பினும், கருவூலத்தில் பணத்தை வைப்பீடு செய்யும் தேர்வுரிமையையும் வேட்பாளர் பின்பற்றலாம்.<br><br>4) இணைய வழியிலான வேட்பு மனு செய்யும் நோக்கத்திற்காக, வேட்பாளர் அவருடைய வாக்காளர் சான்றிதழைக் கோருவதற்கான உரிமையும் வேட்பாளருக்கு உள்ளது. |

| | |
|---|---|
| | **II. மேலும், ஆணையம் அறிவுறுத்துவதாவது:**<br>1) வேட்புமனுவை அளிப்பதற்காக, வேட்பாளருடன் வரும் நபர்களின் எண்ணிக்கை இரண்டாக (2) கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (2019 ஆம் ஆண்டு தேர்தல் அலுவலரின் கையேட்டில் தற்போதுள்ள பத்தி 5.8.1 இரத்தாகும்.)<br><br>2) வேட்புமனு செய்யச் செல்லும் போது பயன்படுத்த வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை 2ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. (2019 ஆம் ஆண்டு தேர்தல் அலுவலரின் கையேட்டில் தற்போதுள்ள பத்தி 5.8.1 இரத்தாகும்.)<br><br>3) வேட்புமனு செய்தல், பரிசீலித்தல் மற்றும் சின்னம் ஒதுக்கீடு போன்ற நடைமுறைகளை மேற்கொள்ள, தேர்தல் அலுவலரின் அறை சமூக இடைவெளி நெறிமுறைகளைப் பின்பற்றும் வகையில் போதுமான இடவசதியுடன் அமைய வேண்டும்.<br><br>4) தேர்தல் அலுவலர் வேட்புமனு செய்ய வரும் வேட்பாளர்களுக்கு முன்கூட்டியே சீரான நேரத்தை ஒதுக்க வேண்டும்.<br><br>5) வேட்பாளர்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றி காத்திருப்பதற்குப் போதுமான இடவசதியை ஏற்பாடு செய்ய வேண்டும்.<br><br>6) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் அடங்கியுள்ள விதித்துறைகளின்படி வேட்புமனு செய்யும் படிவம் மற்றும் ஆணைஉறுதி ஆவணத்தை அளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |
| 6. | **தேர்தல் தொடர்பான பொருட்கள்**<br>போதிய இடவசதியுள்ள பெரிய அளவிலான கூடங்களில் அனைத்து பாதுகாப்பு, துப்புரவு மற்றும் சமூக இடைவெளி நடைமுறைகளுடன் தேர்தல் தொடர்பான பொருட்கள் தொகுப்பு தயாரிக்கப்பட வேண்டும். |
| 7. | **தேர்தல் தொடர்பான பொருட்களின் பங்கீடு மற்றும் சேகரிப்பு**<br>1) தேர்தல் தொடர்பான பொருட்களை பங்கீடு செய்வதற்கும் சேகரிப்பதற்கும் பெரிய கூடங்கள் / இடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.<br><br>2) நடைமுறைக்கேற்றவாறு, பரவலாக்கப்பட்ட முறையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.<br><br>3) தேர்தல் தொடர்பான பொருட்களை பங்கீடு செய்வதற்கும் / சேகரிப்பதற்கும் வாக்குப்பதிவுக் குழுக்களுக்கு முன்னரே சீரான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். |
| 8. | **மூன்றாவது முறையாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சீரற்ற முறையில் தெரிவு செய்யும் நடைமுறைக்கான நேரம்**<br>அனுப்புகை மையத்தில் வாக்குப்பதிவு அலுவலர்கள் பெருமளவில் கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, மூன்றாவது முறையாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சீரற்ற முறையில் தெரிவு செய்தல் நடைமுறைகளுக்குரிய வாக்குப்பதிவு பணியாளர் களுக்கென அனுமதிக்கப்பட்ட 24 மணி நேரம் என்பது 72மணி நேரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>***(இந்நிலையில், தேர்தல் ஆணைய அறிவுரை கடிதம் எண் ECI No.464/Inst./2008/EPS, dated: 19.09.2008 இரத்து செய்யப்படுகிறது)*** |

| | |
|---|---|
| 9. | **வாக்குச்சாவடியில் வாக்காளர்களின் எண்ணிக்கை**<br><br>ஒரு வாக்குச்சாவடியில் உயரளவாக அனுமதிக்கப்பட்ட 1500 வாக்காளர்களுக்கு பதிலாக 1000 வாக்காளர்கள் இருக்கலாம்.<br>***(ஆணையத்தின் அறிவுறுத்தல்கள் எண்.23/SEC/2020ERS, நாள் 23.07.2020)*** |
| 10. | **வாக்குச்சாவடி ஏற்பாடுகள்**<br><br>ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உறுதி செய்யப்பட்ட அடிப்படை வசதிகளை செய்வதற்குரிய விரிவான அறிவுறுத்தல்களை ஆணையம் வெளியிட்டுள்ளது. தற்போது, கோவிட்–19 நிலையை கருத்திற் கொண்டு, பின்வரும் கூடுதல் வசதிகள் / நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>1) முன்னுரிமையாக, வாக்குப்பதிவு நடைபெறும் நாளுக்கு ஒருநாள் முன்னரே, வாக்குச் சாவடி கட்டாயமாக சுத்திகரிப்பான்(Sanitizer) கொண்டு சுத்தப்படுத்தப்பட வேண்டும்.<br><br>2) ஒவ்வொரு வாக்குச் சாவடி அமைவிடத்தின் நுழைவாயிலில் உடல் வெப்பத்தைப் பரிசோதனை செய்யும் கருவி (Thermal scanner) வசதி செய்யப்படவேண்டும்.<br><br>3) வாக்குச் சாவடி அலுவலர் அல்லது துணை மருத்துவப் பணியாளர்கள் அல்லது சமூக நலப் பணியாளர்களால் (ASHA workers), வாக்குச்சாவடி அமைவிடத்தின் / வாக்குச் சாவடியின் நுழைவாயிலில் வாக்காளர்களின் உடல் வெப்பத்தைப் பரிசோதனை செய்தல்.<br><br>4) முதல் பரிசோதனையின்போது, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட வெப்ப நிலைக்கு அதிகமாக இருப்பின், உடல்வெப்பநிலை இருமுறை பரிசோதனை செய்யப்படும் மற்றும் அதிகமான வெப்பநிலை தொடர்ந்து காணப்பட்டால், வாக்காளர்களுக்கு அடையாள வில்லை (Token) / சான்றிதழ் அளிக்கப்பட்டு, வாக்குப் பதிவின் கடைசி ஒரு மணி நேரத்தில் வந்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். வாக்குப்பதிவு முடிவுறும் இறுதியான ஒரு மணி நேரத்தில், அத்தகைய வாக்காளர்களுக்கு, கோவிட்–19 தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றி வாக்களிக்க வசதி செய்து தரப்பட வேண்டும்.<br><br>5) வாக்களிக்க வருபவர்களின் வருகைக்கேற்ப, அடையாள வில்லை (Token) வழங்குவதற்கான உதவி மையம் அமைத்தல். இத்தகைய வசதியால், வாக்காளர்கள் வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை.<br><br>6) சமூக இடைவெளியை செயல் விளக்கமளிப்பதற்கு வரிசையில் நிற்பதற்கான குறியீடு அமைத்தல்.<br><br>7) இருக்கும் இடைவெளியைச் சார்ந்து, வரிசையில் நிற்கும் 15–20 வாக்காளர்களுக்கு ஏற்றவாறு 2 கெஜம் (6 அடி) தூரத்திற்கு வட்டத்தை வரைதல். ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் / மூத்தகுடிமக்கள் என மூன்று வரிசைகள் இருக்க வேண்டும்.<br><br>8) சமூக இடைவெளி விதிமுறைகளைக் கண்டிப்பாக முறைப்படுத்துவதற்காகவும் அதை கண்காணிப்பதற்காகவும் வாக்குச்சாவடி நிலை அலுவலர், தன்னார்வலர்களை ஈடுபடுத்தலாம். |
| | 9) வாக்குச்சாவடி வளாகத்தில், நிழலாக உள்ள பகுதியில் காத்திருப்பு பகுதிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாக நாற்காலிகள், தரைவிரிப்புகள் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தரும்நிலையில், வாக்காளர்கள் பாதுகாப்பு குறித்த கவலையேதுமின்றி வாக்களிக்கும் பணியில் பங்கேற்பார்கள். |

| | |
|---|---|
| | 10) தேவையேற்படும் வாக்குச்சாவடிகளில், வாக்குச்சாவடி செயலி பயன்படுத்தப்படும்.<br>11) ஒவ்வொரு வாக்குச்சாவடியின் நுழைவுப் பகுதிகளில் / வெளியேறும் பகுதிகளில் சோப்பு மற்றும் நீர் வழங்கப்படும்.<br>12) ஒவ்வொரு வாக்குச்சாவடியின் நுழைவுப் பகுதிகளில் / வெளியேறும் பகுதிகளில் சுத்திகரிப்பான்(Sanitizer) வழங்கப்படும்.<br>13) முகக்கவசம் அணியாத வாக்காளர்களுக்கு முகக்கவசம் வழங்கும் வகையில் இருப்பு வைக்கப்படும்.<br>14) COVID – 19 பற்றிய விழிப்புணர்வு சுவரொட்டிகள் பார்வைக்குப்படும் இடங்களில் வைக்கப்பட வேண்டும்.<br>15) வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் அமர்வதற்கான ஏற்பாடுகள் சமூக விலகல் விதிமுறைகளின்படி செய்யப்படும்.<br>16) வாக்குப்பதிவு முகவரோ அல்லது வாக்கெண்ணிக்கை முகவரோ நிர்ணயிக்கப்பட்ட வரம்பை விட அதிகமான உடல் வெப்பநிலையைக் கொண்டிருந்தால், அவரை விடுவிப்பவரை தலைமை தேர்தல் அலுவலர் அனுமதிக்க வேண்டும். அதுகுறித்த பதிவுகளை அவர் வைத்திருப்பார்.<br>17) வாக்காளரை அடையாளம் காணும் நடைமுறையில், அடையாளம் காண்பதற்காக வாக்காளர்கள் தேவைப்படும் போது முகக்கவசத்தை இறக்க வேண்டும்.<br>18) எந்த நேரத்திலும், ஒவ்வொரு வாக்குப்பதிவு அதிகாரியின் முன்னரும் ஒரே (ஒரு) வாக்காளர் மட்டுமே சமூக இடைவெளியைப் பின்பற்றி நிற்க அனுமதிக்கப்படுவார்.<br>19) வாக்காளர் பதிவேட்டில் கையொப்பமிடவும், வாக்களிக்க மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொத்தானை அழுத்தவும் வாக்காளரது கைகளுக்கு கையுறைகள் வழங்கப்படும்.<br>20) வாக்காளர்களின் பயன்பாட்டிற்கான தெளிவான அறிவுறுத்தல்களுடன் பொருத்தமான இடங்களில் கை சுத்திகரிப்பான்கள் வாக்குச்சாவடிக்குள் வைக்கப்படும்.<br>21) COVID – 19ஆல் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகள் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில், COVID – 19 தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றி, அந்தந்த வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு நாளின் இறுதி ஒரு மணி நேரத்தில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். இவற்றை அப்பகுதிக்கான குற்றவியல் நீதிபதிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒருங்கிணைப்பார்கள்.<br>22) கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் வாக்காளர்களுக்கான வழிகாட்டுதல்கள் தனியாக வழங்கப்படும். |
| 11. | **வாக்குப்பதிவு அலுவலருக்கான தேர்தல் தொடர்பான தொகுப்புகள்:**<br>பரிந்துரைக்கப்பட்ட இதர பொருட்களுடன் கூடுதலாக ஒவ்வொரு வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கும் (பாதுகாப்புக் கவச உடைகள் (PPEs) தேவைப்படும் இடங்களைத் தவிர) பின்வரும் தொகுப்புகள் வழங்கப்படும்:<br>i. முகக்கவசம்<br>ii. சுத்திகரிப்பான்<br>iii. முகப்புக் கவசம்<br>iv. கையுறைகள் |

| | |
|---|---|
| 12. | **தபால் வாக்கு**<br>1) பின்வரும் வகைகளைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு தபால் வாக்குப்பதிவு வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது.<br>a. மாற்றுத்திறனாளிகள் (PWD) எனக் குறிக்கப்படும் வாக்காளர்கள்<br>b. 80 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள்<br>c. அறிவிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகளில் பணியாற்றும் வாக்காளர்கள்<br>d. COVID – 19 நேர்மறையான / சந்தேகிக்கப்படும் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட வாக்காளர்கள் (வீட்டில் / நிறுவனத்தில்)<br><br>2) இந்த வகைகளில் ஒவ்வொன்றிற்கான வழிகாட்டுதல்கள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. |
| 13. | **அரசியல் கட்சிகள் / போட்டியிடும் வேட்பாளர்கள் மூலம் பரப்புரை**<br>1) **வீடுவீடாகப் பரப்புரை** – தற்போதுள்ள COVID – 19 வழிகாட்டுதல்கள் உட்பட ஏனைய அனைத்துக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, பாதுகாப்புப் பணியாளர்களைத் தவிர்த்து வேட்பாளர்கள் உட்பட 5 (ஐந்து) நபர்கள் அடங்கிய குழு, வீடு வீடாகப் பரப்புரை செய்ய அனுமதிக்கப்படுகிறது.<br><br>2) **தெருப்பரப்புரை** – 10 வாகனங்களுக்குப் பதிலாக (பாதுகாப்பு வாகனங்களைத் தவிர்த்து, ஏதேனும் இருந்தால்) ஒவ்வொரு 5 (ஐந்து) வாகனங்களுக்கும் வாகனங்களின் தொகுப்பு பிரிக்கப்பட வேண்டும். இரண்டு தொகுப்பு வாகனங்களின் இடைவெளி 100 மீட்டர் என்பதற்குப் பதிலாக, அரை மணி நேரமாக இருக்க வேண்டும். (தேர்தல் அதிகாரியின் கையேடு 2019 இல் பத்தி 5.8.1 ஐ நீக்கம் செய்யப்படுகிறது.)<br><br>3) **தேர்தல் கூட்டங்கள்** – தற்போதுள்ள COVID – 19 வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பொதுக் கூட்டங்கள் / பேரணிகள் நடத்தப்படலாம். இதற்காக மாவட்ட தேர்தல் அலுவலர் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:<br>a. மாவட்டத் தேர்தல் அலுவலர், முன்கூட்டியே, தெளிவாகக் குறிக்கப்பட்ட நுழைவு / வெளியேறும் பகுதிகளுடன் பொதுக்கூட்டத்திற்கான இடங்களை அடையாளம் காண வேண்டும்.<br>b. அத்தகைய அடையாளம் காணப்பட்டதன் அடிப்படையில், மாவட்ட தேர்தல் அதிகாரி, முன்கூட்டியே, பங்கேற்பாளர்களால் சமூக விலகல் விதிமுறைகளை உறுதிப்படுத்த குறிப்பான்களை (markers) குறித்துவைக்க வேண்டும்<br>c. அனைத்து COVID – 19 தொடர்புடைய வழிகாட்டுதல்களும் மாவட்டத்திலுள்ள அனைவராலும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய மாவட்ட ஒருங்கிணைப்பு சுகாதார அலுவலரும் இந்த செயலில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.<br>d. மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் பரிந்துரைத்த, பொதுக் கூட்டங்களுக்கான எண்ணிக்கை வரம்பை மீறாதவாறு மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரும் உறுதி செய்ய வேண்டும்.<br>e. இந்தக் கூட்டங்களின் போது கோவிட் –19 அறிவுறுத்தல்கள் / வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதை மேற்பார்வையிட மாவட்ட தேர்தல் அலுவலர் (DEO) சுகாதாரத் துறை கட்டுப்பாட்டாளர்களை பிரதிநிதியாக நியமிக்க வேண்டும்.<br>f. இத்தகைய செயல்பாடுகளின்போது முகக்கவசங்கள், கிருமிநாசினிகள், உடல் வெப்ப பரிசோதனைக் கருவி போன்ற கோவிட் –19 தொடர்பான தேவைகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் உறுதிப்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| | ஐ. அறிவுறுத்தல்களுக்கு இணங்காமை – கோவிட் –19 நடவடிக்கைகள் குறித்த வழிமுறைகளை மீறும் எவரும், இந்திய தண்டனைக் குறியீட்டு விதிகளின் பிரிவு 188 இன் கீழ் சட்ட நடவடிக்கை மற்றும் 29/07/2020ஆம் நாளிட்ட உள்துறை அமைச்சகத்தின் ஆணை எண். 40–3/2020–DM-I(A) –இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்தக்கூடிய பிற சட்ட விதிகள் தவிர2005ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் பிரிவு 51 முதல் 60 வரையிலான விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பாகும். மாவட்ட தேர்தல் அலுவலர் இதை சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வர வேண்டும்.<br>4) தேர்தல் ஆணையத்தால் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட முறையில் சுவிதா செயலியைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். |
| 14. | காப்பு அறை ஏற்பாடு செய்தல்<br>1) வாக்குப்பதிவு நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையில் வைப்பதற்கு முன் அந்த அறை முழுவதும் கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்ய வேண்டும்.<br>2) ஒவ்வொரு செயல்பாட்டிலும் சமூக இடைவெளி மற்றும் ஏனைய பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| 15. | வாக்குகளின் எண்ணிக்கை<br>1) வாக்குகள் எண்ணும் ஓர் அறையில் 7க்கும் மேற்பட்ட எண்ணும் மேசைகள் அனுமதிக்கப்படக் கூடாது. எனவே, உதவி தேர்தல் அலுவலர்களை கூடுதலாக நியமிப்பதன் வாயிலாக ஒரு தொகுதியின் வாக்குகளை எண்ணும் பணிக்கு 3–4 அறைகளுக்கு பரிசீலிக்கலாம். (30/04/2014 ஆம் நாளிட்ட வழிகாட்டுதல்கள் ரத்து செய்யப்படுகிறது)<br>2) கட்டுப்பாட்டுக்கருவி / வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் காகித தணிக்கைச் சோதனை சாதனம் வைத்துள்ள பெட்டிகளை எண்ணும் மேசைகளில் வைப்பதற்கு முன்பு சுத்திகரிப்பான் பயன்படுத்தி சுத்தப்படுத்தப்பட வேண்டும்.<br>3) ஒவ்வொரு மேசையிலும் ஒரு அலுவலரால் கட்டுப்பட்டுக் கருவி / வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை சாதனத்தின் முத்திரை அகற்றுதல் மற்றும் கட்டுப்பட்டுக் கருவியில் வாக்குப்பதிவின் முடிவைக் காண்பித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படவேண்டும்<br>4) அதிக எண்ணிக்கையிலான வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கூடுவதை தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டு கருவிகளின் முடிவை ஒரு பெரிய திரையில் காட்சிப்படுத்தலாம்.<br>5) எண்ணும் மையங்கள் எண்ணுவதற்குமுன்பும், எண்ணும் போதும் எண்ணிய பின்னரும் கிருமிநாசினி பயன்படுத்தி சுத்தம் செய்யப்படும் .<br>6) தபால் வாக்குகளை எண்ணுவதற்கு, கூடுதல் எண்ணிக்கையிலான உதவி தேர்தல் அலுவலர்கள் தேவைப்படலாம். தேவைப்படும் சூழலில், தேர்தல் அலுவலர் / உதவி தேர்தல் அலுவலரின் மேற்பார்வையின் கீழ் ஒரு தனி அறையில் தபால் வாக்குகள் எண்ணப்படலாம். |

இந்த விரிவான வழிகாட்டுதல்களின் அடிப்படையில், உள்ளூர் நிலைமைகளை கவனத்தில் கொண்டு கோவிட் –19 தொடர்பான விரிவான திட்டம் மாநில அளவில் தயாரிக்கப்படும். பொதுத் தேர்தல்களைப் பொறுத்தமட்டில், சட்டமன்றத் தொகுதி, மாவட்டம் மற்றும் மாநில அளவிலான, சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு சுகாதார அலுவலர்களுடன் கலந்தாலோசித்து மூன்று அடுக்குத் திட்டம் தயாரிக்கப்படும். இடைத்தேர்தல்களைப் பொறுத்தமட்டில், சட்டமன்றத் தொகுதி மற்றும் மாவட்டம் அளவிலான, சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு சுகாதார அலுவலர்களுடன் கலந்தாலோசித்து திட்டங்கள் தயாரிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் தேர்தல் நடக்கும் நேர்வில், தேவைப்படும் இடங்களில் மாவட்ட தேர்தல் அலுவலருடன் ஒருங்கிணைந்து தொகுதிக்குரிய தேர்தல் அலுவலரால் அத்தகைய திட்டங்கள் தயாரிக்கப்படும்.